**தலைப்பு 293 - இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைவழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார்ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை**

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்தும் அத் தேவைப்பாட்டை மீறிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **முற்பணங்கள் பெறுவனவுகள்** | | |
| | சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் நிதி செயலாற்றல் கூற்றிற்கு எடுத்துக்கொள்ளும் போது திறைசேரி கணனி அச்சுப்பிரதிகளில் குறிப்பிட்ட தரவுகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டியபோதிலும் முற்பணம் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 3888070 மற்றும் ரூபா 7762155 ஆல் குறைந்து நிதிக்கூற்றகக்ளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | ஆண்டின் ஆரம்பத்தில் திறைசேரி அச்சுக்குறிப்புக்களுக்கும் திணைக்களத்தின் ஏடுகளுக்குமிடையே காணப்பட்ட வித்தியாசத்தை தீர்த்து வைப்பதற்கான பதிவுகள் மற்றும் பிழையான மீதிகளை சரி செய்தல்களுக்கான பதிவுகளின் காரணமாக ஏற்பட்டதாகும். |
| **(ஆ)** | **கட்டுநிதி கணக்கு** | | |
| | மீளாய்வாண்டின் இறுதியளவில் நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 23,306,998 தொகையான | - மேற்படி - | செம்மையாக்கல் கணக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு குறித்துக் |

| | | |
|---|---|---|
| சாதகமான கட்டுநிதி மீதியை இணக்கம் செய்வதற்காக கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டியபோதிலும் கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | கொள்கின்றேன். |

**1.6.2 நிதி செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **முற்பணங்கள் பெறுவனவுகள்** | | |
| | திணைக்களத்தின் ஏடுகளின் பிரகாரம் திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 695,525,000 ஆக இருந்தபோதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் அது ரூபா 950,373,419 ஆகப் பதியப்பட்டதனால் திறைசேரி கட்டுநிதி ரூபா 254,848,419 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றிக்கையின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். | திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுநிதி மற்றும் ஏனைய பெறுவனவுகள் தனித்தனியாக குறிப்பிடப்படவேண்டிய போதிலும் தாமத தவறினால் ஏனைய பெறுவனவுகளும் திறைசேரி கட்டுநிதியாகக் குறிப்பிடப்பட்டிருந்ததனால் திறைசேரி கட்டுநிதி அதிகரித்து குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த கணக்குப் பொழிப்புக்கள் மற்றும் திறைசேரி அச்சுப் பிரதிகளின் மூலம் உறுதிப்படுத்தக்கூடியதான ரூபா 282,029,022 தொகையான ஏனைய பெறுவனவுகள் நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஏனைய பெறுவனவுகள் நிதி செயலாற்றல் கூற்றில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மேலே இடம்பெற்ற தாமத தவறின் காரணமாக ஏனைய பெறுவனவுகள் தனித்தனியாக காட்டப்பட்டிருக்காததனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 1,022,597,791 ஆக இருந்தும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,010,972,881 ஆக | 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றிக்கையின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் சுற்று | உரிய நிதிக்கூற்றுக்களில் தேறிய பெறுவனவுகள் பதியப்பட்டுள்ளதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை |

| | | | |
|---|---|---|---|
| | பதியப்பட்டதனால் வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 11,624,910 ஆகக் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முறைமைப்படுத்தி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |
| (ஆ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த கணக்குப் பொழிப்புக்கள் மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் ஆளணி வேதனங்களும் ஏனைய செயற்பாட்டுச் செலவுகளும் வைப்புக் கொடுப்பனவுகள், நிவாரணங்களை மீளச் செலுத்துதல் ஆகிய செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 1,004,110,628 ஆக இருந்தும் அது ரூபா 323,229,812 ஆக காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்ததனால் ரூபா 680,880,816 தொகையான வித்தியாசம் காணப்பட்டது. | - மேற்படி - | மீண்டுவரும் செலவுகளுக்காக செலவுசெய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் மாத்திரம் உள்ளடக்கப்பட்டதனால் இத்தவறு இடம்பெற்றுள்ளது. சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கடன் மீதியாக ரூபா 19,444,224 அறவீடு செய்யப்பட்டிருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் இப் பெறுமதி காட்டப்படடிருக்கவில்லை. | - மேற்படி - | விளக்கமான விபரத்தை சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்காமையினால் இந்த நிலைமை உருவாகியுள்ளதுடன் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் கொடுப்பனவு மற்றும் பௌதீக சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளுதல் ரூபா 40042863 ஆக இருந்தபோதிலும் இது தொடர்பாக காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 635652759 ஆகக் காட்டப்பட்டிருந்ததனால் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 595609896 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | பதில் வழங்கப்படவில்லை. |

### 1.6.4 <u>நிதிநிலைமைக்கூற்று</u>

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றக்களுடன் ஏசீஏ 6 படிவத்தின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்களின் பெறுமதி ரூபா 206,255,463 ஆக இருந்தபோதிலும் திறைசேரி கணனி அச்சுப்பிரதிகளில் பெறுமதி காட்டப்படாதிருந்ததன் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதியற்ற சொத்துக்களின் பெறுமதி உள்ளடக்கப்படடிருக்கவில்லை. | நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான அறிக்கையை நாளதுவரையாகப் பேணப்பட வேண்டியதுடன் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் அப் பெறுமதி அறிக்கையிடப்படுதல் வேண்டும். | சிகாஸ் கணக்கின் நிதியற்ற சொத்துக்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தும் பேரேட்டுக்கணக்கிலும் மற்றும் BOSS அறிக்கையிலும் இருந்த தரவுகளில் வேறுபாடு காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரியின் நிதியற்ற சொத்துக்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. தற்பொழுது அத்தகவல்களை சரியாக பதிவு செய்தல் இடம்பெற்றுவருகின்றது. |
| (ஆ) | பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற சிறிய பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் பிரதேச அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட 16 மோட்டார் சைக்கிள்கள் முறைப்படியாக பெறுப்பேற்கப்பட்டு பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் ஒரு பதிவேட்டில் பதியப்படுதல் வேண்டும். | செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 16 மோட்டார் சைக்கிள்கள் இத் திணைக்களத்தின் இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இச் சொத்துக்களின் பெறுமதிகள் எதிர்காலத்தில் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தயவாக தெரிவித்துக்கொள்கின்றேன். |

### 1.6.5 கட்டுநிதி மீதி

கட்டுநிதி மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி கட்டுநிதி (ACA-3) படிவத்தில் ஏனைய மூலங்களின் பெறுவனவுகள் ரூபா 31,712,815 மற்றும் திறைசேரி பெறுவனவுகள் | 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரி | (அ) மற்றும் (ஆ) வகைப்படுத்தல் தவறு ஏற்பட்டுள்ளதனால் அதனை சரிசெய்வதற்கு |

| | | |
|---|---|---|
| ரூபா 950,373,419 ஆகக் காட்டப்பட்டிருந்தும் மாதாந்த கணக்கு பொழிப்புக்களின் பிரகாரம் அது முறையே ரூபா 282,029,502 மற்றும் ரூபா 695,525,000 என்பது அவதானிக்கப்பட்டது. | கட்டுநிதி (ACA-3) படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். | குறித்துக்கொள்கின்றேன். |
| (ஆ) திறைசேரி கட்டுநிதியை தீர்த்துவைத்தல் திணைக்கள ஏடுகளின் பிரகாரம் செலவுகள் மூலம் ரூபா 957,086,234 தொகையும் பணத்தின் மூலம் ரூபா 25,000,000 ஆகவும் இருந்தபோதிலும் திறைசேரி அச்சுப் பிரதிகளில் ரூபா 982,086,234 செலவுகளின் மூலம் தீர்த்துவைத்தல்களாக மாத்திரம் காட்டப்படடிருந்தது. | - மேற்படி - | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.6.6 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **(அ) பிணைப்பதிவேடு** | | |
| பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய ஒரு பிணைப்பதிவேடு தயாரிக்கப்படடிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான ஒரு பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் ஊழியர் பிணை வைப்பு பதிவேடு பேணப்பட்டுள்ளன என்பதற்கான சான்றுகளை கண்டுபிடிக்க முடியாதுள்ளது. எனினும் இதன் பின்னர் ஊழியர் பிணை வைப்பு பதிவேட்டினைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். |
| **(ஆ) நட்டங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| மொனராகலை மற்றும் கேகாலை பிரதேச அலுவலகங்களில் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில் லை. | நிதிப்பிரமாணம் 110 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத்திற்கு இணங்க நட்டம் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்படு தல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் மொனராகலை மற்றும் கேகாலை பிரதேச அலுவலகங்களினால் அறிக்கையிடப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பிரதேச செயலகங்களில் ‘‘நட்டங்கள் மற்றும் சேதனங்கள் பதிவேட்டில்’’ நாளதுவரையாக்கப்படுவதற்காக |

ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**1.6.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்வற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு | - | ஒவ்வொரு நிறுவனத்தினாலும் நிதிக்கூற்றுக்களுடன் விதிகளின் மூலம் காட்டப்படுகின்ற பெற்றுக்கொள்ளக் கூடியதான காலப்பகுதிக்குள் அந்த நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காளருக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலகக் தேசிய கணக்கயர்வு அதிகாரச் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த செலாற்றல் அறிக்கையை கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக்சுற்றுக்களையும் செயலாற்றல் அறிக்கையையும் அடுத்துவரும் ஆண்டின் போது நிதிக்கூற்றக்களுடன் சமர்பிப்பேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிகச் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை (நி.பி) | | | | |
| (i) | நி.பி 104(4) | 2,091,628 | முன்னைய ஆண்டில் ஏற்பட்ட தீயினால் திணைக்களத்தின் லொறியை உள்ளடக்கிய இன்னும் இரண்டு வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டம் சம்பந்தமாக பூரண அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு 06 மாத காலம் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நட்டம் ஏற்பட்டதன் பின்னர் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த விசாரணையின் முழுமையான அறிக்கையை 02 மாதங்களுக்குள் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்ததானது பொலீஸ் விசாரணை முடிவடையாததினாலாகும். மேலும் தொடக்க புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் சம்பவம் தொடர்பான பொறுப்புக்கூறக்கூடிய நபர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | எடுத்திருந்தும் அதற்கு பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | | இனங்காண முடியாது என சிபார்சு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய காப்புறுதிக் கம்பனி அதற்காக ரூபா 338,000 தொகையினை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. |
| (iii) | நி.பி 106(3)(ஆ) | - | நட்டங்களை ஏடுகளிலிருந்து பதிவழிக்கும் போது அதற்கு தேவையான நிதி ஏற்பாட்டை குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் இல்லாதுவிடின் அடுத்துவரும் நிதி ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டின் மூலம் தேவையான நிதி ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். எனினும் அவ்வாறு செய்யாது மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத செலவு விடயங்களுக்காக நி.பி 66 இன் மூலம் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டு சேவையை கைவிட்டுச் சென்ற 05 உத்தியோகத்தர்களின் கடன் மீதி பதிவழிக்கப்பட்டடிருந்தது. | வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிலுள்ள ஒரு செலவு விடயமாக இல்லாதிருக்கையில் நி.பி 65(4)(iv) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறைநிரப்பு மதிப்பீடு சமர்ப்பிக்கப்படாது அங்கீகரித்த செலவு விடயங்களின் நிதி ஏற்பாட்டின் சேமிப்புக்களிலிருந்து தேவைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்வதற்கு திறைசேரியின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| | நி.பி 215(3) | 12,965,568 | பதியதலாவ நாற்று மேடையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வரிசை அமைச்சின் கீழுள்ள செயற்திட்டங்களின் பணத்திலிருந்து பெற்றக்கொள்ளப்பட்ட அளவு வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிதி ஏற்பாடு பெற்றக்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்காக வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களிலிருந்து நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும். | தற்பொழுது பதியதலாவ நாற்று மேடையின் அப்விருத்தி நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அப்பணத்தை பயன்படுத்துவதற்கு ஏற்பட்டுள்ளது என தயவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| நி.பி 571(2) | 2,002,313 | 04 வைப்புக் கணக்குகளுக்குரிய 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்து தீர்த்துவைப்பதற்கு அல்லது அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (,) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களுக்காக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 04 பிரதேச அலுவலகங்களினால் வாகனங்களின் நுகரப்பட்ட எரிபொருள் அளவு தொடர்பான பரிசோதனை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை வானங்களுக்கான எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படுதல் வேண்டும். | எரிபொருள் பரீட்சிக்கப்படாத பிரதேச அலுவலகங்களுக்கு ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனத்தின் நுகர்வு செய்யப்பட்ட எரிபொருளின் அளவை பரீட்சிக்குமாறு ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் சில மாதங்களில் வேண்டப்பட்ட கட்டுநிதியை திட்டமிட்ட கட்டு நிதியுடன் இணக்கம் செய்த போது கட்டு நிதி வேண்டுதலானது 19 சதவீத்திற்கும் 42 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவில் அதிகரித்திருந்ததுடன் அதற்கிணங்க ஆண்டிற்கான கட்டு நிதி தேவைப்பாடு முறைப்படியாகத் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்காக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆண்டிற்கான கட்டு நிதியை முறைப்படியாகத் திட்டமிடுவதற்காக கட்டு நிதி முறையாக பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். கட்டு நிதி கிடைக்காமையின் காரணமாக இந் நிலைமை உருவாகியுள்ளது. |

## 2.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நி.பி 50 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்படாததன் காரணமாக 07 செலவு விடயங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள ரூபா 941.7 மில்லியன் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 331.49 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 12 சதவீதத்திலிருந்து 36 சதவீதம் வரையான அளவில் காணப்பட்டது. | கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுதல் ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதி நிர்ணயிக்கப்பட்டு ஆண்டின் போது நிறைவேற்றக்கூடிய செயற்பாடுகளின் அளவுக்குச் சமனான வகையில் நிதி ஏற்பாடு வழங்கப்படுதல் வேண்டும். | கட்டுநிதி முறைப்படி கிடைக்காமையினால் நிதி ஏற்பாடுகளிலிருந்து கொடுப்பனவு செய்வதற்கு முடியாதிருந்தனால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. கட்டுநிதி முறைப்படியாக கிடைத்திருக்குமாக இருந்தால் நி.பி 66 இன் கீழ் நிதி ஏற்பாட்டை மாற்றுவதன் மூலம் செலவு விடயங்களுக்கு மத்தியில் சேமிப்பாக இருப்பதனைப் போல தேறிய நிதி ஏற்பாட்டினை மிகைத்துள்ள கடப்பாடுகளையும் தவிர்த்துக் கொள்ள முடியாதுள்ளது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 09 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 2,699,358 தொகையான பொறுப்புக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கடப்பாடு களையும் பொறுப்புக்களையும் இனங்காணுதல் வேண்டும். | கட்டு நிதி முறையாக கிடைத்திருக்குமேயாக இருந்தால் இக் கடப்பாடுகளுக்குரிய செலவு விடயங்களுக்கு மாற்றம் செய்து கொடுப்பனவு செய்யக் கூடியதாக இருந்திருக்கும். |

## 2.4 முற்பணங்களை வழங்குதலும் தீர்த்து வைத்தல்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் உப கட்டுநிதியானது அது வழங்கப்பட்ட செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் | நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அப்பிரமாணங்களுக்கு | வழங்கப்பட்ட முற்பணங்கள் உரிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் தீர்த்து |

| | | |
|---|---|---|
| தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 100,500 மொத்த பெறுமதியான 06 செயல் நிமித்த உப கட்டுநிதிகளைத் தீர்த்து வைப்பதற்காக 04 நாட்களுக்கும் 210 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம் தாமதமடைந்திருந்தது. | முரணாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எச்சரிக்கப்பட்டுள்ளது. |

**2.5 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| துருசவிய நிதியத்திலிருந்து 2017 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தில் எஞ்சியுள்ள ரூபா 1,085,962 தொகை உரிய குறிக்கோள்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் தீர்த்து வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அப்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இப்பணம் தொடர்பாக துருசவிய நிதியத்திடம் விசாரித்து சரியான தகவல்களையும் பெற்றுக்கொண்டு தேவையான சரி செய்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பபேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 அந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 3(ஆ) பந்தியின் பிரகாரம் அங்கீகரித்த பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் வருடாந்த கட்டுநிதித்திட்டம், வருடாந்த பெறுகைத்திட்டம், முதலியவை தொடர்பான விபரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் தாபன கட்டமைப்பு, அங்கீகரித்த பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர், கட்டுநிதி திட்டம் என்பன தொடர்பான விபரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | அங்கீகரித்த பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர், வருடாந்த கட்டுநிதித்திட்டம், வருடாந்த பெறுகைத்திட்டம், முதலியவை தொடர்பான விபரம் உள்ளடக்கப்படவில்லை என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். அடுத்து வரும் ஆண்டுகளிலிருந்து அத்தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.2 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்து கொள்ளப்படாமை.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

<table>
<tr><th>கணக்காய்வு அவதானிப்புக்கள்</th><th>சிபார்சு</th><th>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை</th></tr>
<tr><td>(அ) மீளாய்வாண்டில் சிறிய இறப்பர் தோட்டங்கள் மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகளின் முறையே 1000 ஹெக்டெயர்கள் மற்றும் 500 ஹெக்டெயர்களில் இறப்பர் மீள் பயிர்செய்கை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் அவற்றில் 523 ஹெக்டெயர்கள் மற்றும் 319 ஹெக்டெயர்களில் மாத்திரம் மீள் பயிர்ச் செய்கை செய்யப்பட்டிருந்தன. அதற்கிணங்க நிறைவேற்றப்படாத அளவு திட்டமிடப்பட்ட அளவில் 48 சதவீதம் மற்றும் 36 சதவீதமாக இருந்தன.</td><td>திட்டமிடப்பட்ட அளவை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.</td><td>2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கப்பட்டுள்ள மீள் பயிர்ச் செய்கை உத்தரவுப் பத்திரத்திற்காக 2019 ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தின் போதும் பயிரிடப்பட்டுள்ளதனால் தற்பொழுது சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பெருந்தோட்ட கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள மீள் பயிர்ச் செய்கை காணிகளின் அளவு பின்வருமாறாகும்.
<table>
<tr><th>பிரிவு</th><th>இலக்கிடப்பட்ட காணியின் அளவு</th><th>பயிரிடப்பட்ட காணியின் அளவு</th><th>சதவீதம். %</th></tr>
<tr><td></td><td>ஹெக்டெயர்</td><td>ஹெக்டெயர்</td><td></td></tr>
<tr><td>சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்</td><td>1000</td><td>524.61</td><td>52.40</td></tr>
<tr><td>பெருந்தோட்ட கம்பனிகள்</td><td>500</td><td>338,644</td><td>67.72</td></tr>
</table></td></tr>
<tr><td>(ஆ) மீளாய்வாண்டில் மரபுரீதியான மற்றும் மரபுரீதியற்ற பிரதேசங்களில் 750 ஹெக்டெயர் புதிய காணிகளில் பயிரிடுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 342.5 ஹெக்டெயர் புதிய காணிகளில் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்தன.</td><td>திட்டமிடப்பட்ட அளவை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.</td><td>2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் நாற்றுக்கள் நடுகை செய்யபட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டு எங்களால் பயிர்செய்கை உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தும் நாற்றுக்களை நடுகை செய்யும் கால எல்லை மாற்றமடைந்ததன் காரணமாக இந்த இலக்குகளை</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| அதற்கிணங்க நிறைவேற்றப்படாத அளவு திட்டமிடப்பட்ட அளவில் 54 சதவீதமாக இருந்தது. | | அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே, சந்தையில் இறபபர் விலை குறைவடைந்தமை, வேலையாட்கள் பற்றாக்குறை முதலிய விடயங்களின் காரணமாக 01 கிலோ கிறாம் உலர்ந்த இறப்பரின் உற்பத்திக் கிரயம் அதிகரித்துச் சென்றதன் காரணமாக இந்த இலக்கை அடைந்து கொள்ளல் சிக்கலாக இருந்தது.<br><br>இதற்கான தீர்வாக இறப்பர் பயிர்ச் செய்கையாளர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் வழங்கப்படுகின்ற நிவாரணப் பணம் 2019 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து இரண்டு மடங்காயிருந்தது. |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் (Out come) அடைந்து கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ஒரு தனியார் கம்பனியுடன் 2006 மார்ச் 02 ஆந் திகதி இறப்பர் தகவல் முகாமைத்துவ முறைமையை (RIMS) அபிவிருத்தி செய்வதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு வரை அதற்காக ரூபா 17.45 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் உரிய செயற்பாடுகள் 2016 திசெம்பர் மாதம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2019 மே மாதம் வரை முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒரு ஆண்டில் முறைமையை அபிவிருத்தி செய்தலைப் பூர்த்தி செய்வதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தனால் விரைவாக அந்த அபிவிருத்தி நடவடிக்கைகயைப் பூர்த்தி செய்து எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுதல் வேண்டும். | தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுபேறுகளை மதிப்பீடு செய்ததன் பின்னர் ஏனைய பிராந்திய அலுவலகங்களில் கணனி முறைமை அமுல்ப்படுத்தப்படும் என தயவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். |

**3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்தெம்பர் 12 அந் திகதி 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தால் ஏனைய நிறுவனங்களின் காணிகளில் நிர்மாணிக்கப்பட்ட 24 உத்தியோக பூர்வ இல்லங்களுக்குரிய காணிகளின் உரிமைகளைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளை பொறுப்பேற்கும் நடவடிக்கையை விரைவுபடுத்துவதன் மூலம் அவற்றை தீர்த்து வைப்பதற்குப் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொறுப்பேற்பதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் இணக்கப்பாடு கோரப்பட்டுள்ளது. சில காணிகள் பிரதேச செயலகங்களிடம் காணப்படுவதுடன் தற்பொழுது இக் காணிகளை திணைக்களத்தினால் பொறுப்பேற்கும் நடவடிக்கை இடம் பெற்றுவருகின்றது. |
| (ஆ) திணைக்களத்தின் தலைமை அலுவலகம் 2017 ஆம் ஆண்டிலிருந்து ஒரு தனியார் கட்டிடத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அதற்காக கட்டிடங்களின் வாடகையானது பெறுமதி சேர் வரியுடன் மொத்த தொகையாக ரூபா 65.25 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 10 | அரசாங்க பணத்தை சிக்கனமாகப் பயன்படுத்தவதற்கு இயலுமான வகையில் தலைமை அலுவலக கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை ஆரம்பித்தல் வேண்டும். | இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்காக உத்தேசிக்கப்பட்ட காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக 2011 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், திணைக்களம் நிர்மாணிப்பதற்குப் |

| | | |
|---|---|---|
| | ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்துக்கு முன்பிலிருந்து பத்தரமுல்லை பிரதேசத்தில் ரூபா 59.3 மில்லியன் செலுத்திக் கொள்வனவு செய்யப்பட்ட 75 பேச்சஸ் காணியை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொண்டு தலைமை அலுவலகத்திற்கான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குள்ள இயலுமை ஆராய்ந்து பார்க்கப்படவில்லை. | பொருத்தமான இறப்பர் அதிக அளவில் பயிரிடப்படுகின்ற ஒரு பிரதேசத்தை தெரிவு செய்து தருமாறு அமைச்சரவைப் பத்திரம் இலக்கம் 11/2041/531/017 ஆம் இலக்க மற்றும் 2011 ஒக்தோபர் 10 ஆந் திகதி தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த இடத்தை தெரிவு செய்வதற்கு ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமையின் அடிப்படையில் மேதிலக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதில் கட்டிடத்தை நிர்மாணிப்பது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மற்றும் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் அமைச்சு செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 3.6 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணைவைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய திணைக்களத்தின் 70 உத்தியோகத்தர்களினால் பிணை வைக்கப்படாதிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 892 இன் பிரகாரம் பிணை வைப்பதற்குத் தேவையான உத்தியோகத்தர்களின் பட்டிலை திருத்தம் செய்து அந்த அறிக்கை ஒவ்வொரு 03 ஆண்டுகளின் இறுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க நிதியை பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரை அல்லாது விடின் பொருட்கள் என்பவற்றை வழங்குதல் சம்பந்தமாக நிருவாக ரீதியாக பொறுப்புக் கூற வேண்டியதாக இருத்தல், அதிகாரத்தை ஒப்படைத்தலின் கீழ் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அரசாங்க கணக்ககுகளுக்குரிய வவுச்சர்களைச் சான்றுபடுத்துகின்றவர்களும், காசோலைகளில் கையெழுத்திடுகின்றவர்களும், சுயமாக அரசாங்க நடவடிக்கைகளை நேர்மையாக | இத் திணைக்களத்தின் ஊழியர் பிணை வைப்பு பதிவேடு பேணப்பட்டமைக்கான சான்றுகளை தேடிக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. எனினும், இதன் பின்னர் நி.பி 880 இன் படி ஊழியர் பிணை வைப்பிணை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்று பதிவேட்டினைப் பேணவதற்குப் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், ஒவ்வொரு 3 ஆண்டுகளின் இறுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுமெனவும் தயவு தெரிவித்துக்கொள்கிறேன். |

| | | |
|---|---|---|
| | நிறைவேற்றுகின்றார்கள் என்பதற்கு பிணை வைத்தல் வேண்டும் மற்றும் பட்டியல் திருத்தம் செய்யப்பட்டு ஒவ்வொரு 03 ஆண்டுகளின் இறுதியிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | |

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 மே 18 ஆந் திகதி திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தை தோற்றுவிப்பதற்காக அதற்குரிய ரூபா 420,000 பெறுமதி மற்றும் மீளாய்வாண்டின் யூன் மாதத்திலிருந்து ஒரு ஆண்டிற்கான சேவைக் கட்டணமாக ரூபா 120,000 தொகை செலுத்தப்பட்டிருந்தும் 2019 மே 30 வரை உத்தியோகபூர்வ இணைய தளப்பக்கம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சேவைக் கட்டணத்தை செலுத்திய திகதியிலிருந்து உரிய சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக முடியாதிருந்த விடயம் சம்பந்தமாக விசாரித்துப் பார்த்து மற்றும் முடியுமான அளவு விரைவாக உத்தியோகபூர்வ இணைய தளத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | • திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தை தோற்றுவித்தல் 2018 மே மாதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் விலாசம் (url) http://www.rubberdev.gov.lk/ho என செயற்படுத்தப்பட்டது.<br>• பின்னர் இணைய தளத்தை பயன்படுத்துவதன் வசதி கருதி அதன் (url) http://www.rubberdev.gov.lk/ho என மாற்றப்பட்டது. |

**4. மிகைக் கொடுப்பனவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கேகாலை தெஹியோவிட இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகத்தை திருத்தம் செய்வதற்காக கொடுப்பனவு செய்யும் போது அளவீட்டுப் பத்திரம் மற்றும் பட்டியல்களின் பிரகாரம் roof and roof plumbing work இன் கீழ் Flashing செய்யப்பட்டிருந்த போதிலும் | ஒரு நபரின் வேலையை மற்றுமொரு நபரினால் பரீட்சிக்கப்படும் வகையில் வேலைகள் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறே கொடுப்பனவுகள் செய்யும் போது பௌதீக செயலாற்றல் தொடர்பாக ஆழமாக | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனத்தை மேலும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| அதற்காக ரூபா 84,884 செலுத்தப்பட்டிருந்தது. | ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். | |
| (ஆ) நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால் 11 சதவீத கழிவு வழங்கப்பட்டிருந்தும் அதற்காக கொடுப்பனவு செய்யும் போது 5 சதவீத கழிவு மாத்திரம் கழிக்கப்பட்டதனால் நிறுவனம் ரூபா 154,782 தொகையினை மேலதிகமாகச் செலுத்தியிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்தில் மீளாய்வாண்டில் உருவாக்கப்பட்ட 05 பணிப்பாளர் (பிராந்திய) பதவிகள் 03 கணக்காய்வாளார் பதவிகள் சட்ட உத்தியோகத்தர் பதவி, பிரதிப் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் பதவிகள் பல ஆண்டுகளாக வெற்றிடமாகக் காணப்பட்டன. | அத்தியாவசியமான பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளருக்கு வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு வருகின்றது. |